TAMIL NADU POLICE
INTEGRATED INVESTIGATION FORM-I

# FIRST INFORMATION REPORT
## முதல் தகவல் அறிக்கை
(Under Section 154 Cr.P.C.)
(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

C 8108544
04/2021

1. District மாவட்டம்: சிவகங்கை
   PS: காவல்நிலையம்: V&AC
   Year: ஆண்டு: 2021
   FIR No.: மு.த.அ. எண்:
   Date: நாள்: 12.04.2021

2. (i) Act சட்டம்: — Sections பிரிவுகள்:
   (ii) Act சட்டம்: Prevention of Corruption Act, — Sections பிரிவுகள்: 7(a)
   (iii) Act சட்டம்: 1988 (as amended in) Act 16 of 2018 — Sections பிரிவுகள்:
   (iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள்
   Date from : நாள் முதல் 26.03.2021
   Date to : நாள் வரை 10.04.2021
   Time Period : நேர அளவு
   Time from : நேரம் முதல்
   Time to : நேரம் வரை
   (b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 12.04.2021
   Time நேரம் : 08.30 hrs
   (c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் 12.04.2021
   Time நேரம் : 09.00 hrs

4. Type of Information : Written/ Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக — எழுத்துமூலமாக

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் — சுமார் 30 கி.மீ. தென்கிழக்கு
   Beat Number : முறைக் காவல் எண்
   (b) Address : முகவரி — நேரடி நெல் அரசு கொள்முதல் நிலையம், புல்லுக்கோட்டை.
   (c) In case outside limit of this Police Station, then the Name of P.S : இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர்
   District : மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் — ம. அருளானந்து
   (b) Father's/ Husband's Name தந்தை / கணவர் பெயர் — மரியராசு
   (c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு
   (d) Nationality : நாட்டினம் — இந்தியன்
   (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண் —
   Date of Issue : வழங்கப்பட்ட நாள் —
   Place of Issue : வழங்கப்பட்ட இடம்
   (f) Occupation தொழில் — விவசாயம்
   (g) Address முகவரி — த. மருதங்குடி (கிராம அஞ்சல்), காளையார்கோவில் (, சிவகங்கை Dt.

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
   தெரிந்த / ஐயப்பாட்டிற்குரிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)

   திரு.மகேஸ்வரன், பில் கிளார்க், அரசு நெல் கொள்முதல் நிலையம், புல்லுக்கோட்டை, காளையார்கோவில் தாலுகா, சிவகங்கை மாவட்டம்.

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
   குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

—

—

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

11. Inquest Report / Un-natural death Case No. if any: —
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம் (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

பணிந்து சமர்பிக்கிறேன்:- இன்று 12.04.2021 ஆம் தேதி காலை 08..30 மணிக்கு நான் நிலைய பொறுப்பில் இருந்தபோது, திரு.ம.அருளாந்து என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த புகார் மனுவை பெற்று, இரகசிய விசாரணை செய்தும், புகார்தாரர் மற்றும் குற்றம் சுமத்தப்பட்ட சிவகங்கை மாவட்டம், காளையார்கோவில் தாலுகா, புல்லுக்கோட்டை அரசு நெல் கொள்முதல் நிலையத்தில், பில் கிளார்க்காக வேலை செய்யும் திரு.மகேஸ்வரன் என்பவர் பற்றி ரகசிய விசாரணை மேற்கொண்டு, அவரின் நடத்தைகளை அறிந்தும், புகார் மனுவில் ஊழல் தடுப்பு சட்டத்தின்படி நடவடிக்கை எடுக்க முகாந்திரம் இருந்த காரணத்தினால் அந்த தகவலை சென்னை, ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை, தென்சரக காவல் கண்காணிப்பாளர் அவர்களுக்கு தொலைபேசி மூலம் தகவல் தெரிவித்து, பின் அன்னாரின் அனுமதி பெற்று 12.04.2021 ஆம் தேதி 09.00 மணிக்கு, சிவகங்கை, ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்ற எண்.04/2021, U/s. 7(a) of Prevention of Corruption Act 1988 (as amended in) Act 16 of 2018-ன்படி வழக்குப்

(தனித்தாள் இணைக்கப்பட்டுள்ளது)

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ..................... Rank ..................... to take up the Investigation / Refused Investigation / transferred to PS.............................................on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் .......................... பதவி ...................... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ............................................ காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

— M. Arulandu 12/4/2021. [signature]

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் / பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்

12/04/2021

Name: பெயர் M.குமாரவேல்,
Rank: நிலை காவல் ஆய்வாளர்,
ஊழல் தடுப்பு மற்றும்
கண்காணிப்புத்துறை
சிவகங்கை

பதிவு செய்தேன். மனுவின் விபரம் பின்வருமாறு:- **அனுப்புனர்**:- ம.அருளாந்து, S/o.மரியராசு, த.மருதங்குடி (கிராமம் & அஞ்சல்), காளையார்கோவில் தாலுகா, சிவகங்கை மாவட்டம். **பெறுநர்**, உயர்திரு காவல் ஆய்வாளர் அவர்கள், லஞ்ச ஒழிப்பு துறை, சிவகங்கை. அய்யா, நான் சிவகங்கை மாவட்டம், காளையார்கோவில் தாலுகா, மருதங்குடி கிராமத்தில் கடந்த 40 ஆண்டுகளாக குடும்பத்துடன் குடியிருந்து வருகிறேன். நான் தற்போது விவசாய வேலை செய்து வருகிறேன். நான், என்னுடைய விவசாய நிலத்திலும் மற்றும் எனது உறவினர்களின் விவசாய நிலத்திலும் நெல் பயிரிட்டதில் எனக்கு சுமார் 540 மூடை நெல் கிடைத்தது, இதை புல்லுக்கோட்டையில் உள்ள அரசு நேரடி நெல் கொள்முதல் நிலையத்திற்கு 26.03.2021 ஆம் தேதியன்று கொண்டு சென்றேன். அப்போது, மேற்படி நிலையத்தில் பில் கிளார்க்காக வேலை செய்துவரும் திரு.மகேஸ்வரன் என்பவர் இருந்தார். நான் அவரிடம், நான் கொண்டுவந்துள்ள நெல் மூட்டைகளை காண்பித்து, நெல்லைக் கொள்முதல் செய்துகொள்ளும்படி கேட்டேன். அதற்கு அவர், என்னிடம் 1 கிலோ நெல்லானது ரூ.19.58/-க்கு அரசால் கொள்முதல் செய்யப்படுகிறது. இதில் ஒரு மூட்டைக்கு 40 கிலோவாக கணக்கிடப்படுகிறது என்று சொல்லிவிட்டு, நான் கொண்டுவந்த மூடைகளை தனியாக அடுக்கிவைத்துவிட்டார். பின் என்னிடம் அவர் மேற்கண்ட நெல் மூட்டைகளை அரசு நிர்ணயத்த விலையில் கொள்முதல் செய்யவேண்டுமென்றால், ஒரு மூட்டைக்கு ரூ.47/- வீதம், மொத்தம் உள்ள மூடைகளுக்கு, கணக்கீடு செய்து, அவருக்கு லஞ்சமாக தரவேண்டும் என்று சொன்னார். அத்துடன் எடைபோடும் சமயத்தில் எத்தனை மூடைகள் என்று கணக்கீட்டு, எவ்வளவு லஞ்சப்பணம் தனக்கு தரவேண்டும் என்று சொல்வதாகச் சொன்னார். அதன் பின் நான், சில நாட்கள் கழித்து 10.04.2021 ஆம் தேதி மாலை சுமார் 5.00 மணியளவில் மீண்டும் மேற்படி அலுவலகத்தில், மேற்படி அலுவலரை சந்தித்து, மேற்படி எனது நெல் மூடைகளை கொள்முதல் செய்வது சம்பந்தமாக கேட்க, அப்போது அவர் என்னிடம், எனது மூடைகள் அனைத்தும் எடைபோடப்பட்டதில், அதில் 540 நெல் மூட்டைகள் இருப்பதாகச் சொல்லி, ஏற்கனவே அவர் கூறியுள்ளபடி ஒரு மூட்டைக்கு ரூ.47/- வீதம், 540 நெல் மூடைகளுக்கு மொத்தம் ரூ.25,380/- உடன், மேலும் ரூ.1020/- சேர்த்து, ரூ.26,400/- தனக்கு லஞ்சமாகக் கொடுத்தால் மட்டுமே, நெல்

கொள்முதல் தொகையான ரூ.4,22,928/-க்கு பில் போட்டு தரமுடியும் என்று என்னிடம் சொல்லியும், இந்த பில்லை கொண்டுதான் அரசு கணக்கில் இருந்து, உங்களது வங்கி கணக்கிற்கு, பணத்தை வரவு வைக்கமுடியும் என்று சொன்னார். அதனை தற்போதே தரவேண்டும் எனவும் சொன்னார். நான், தற்போது பணம் கொண்டுவரவில்லை என்று சொல்லிவிட்டு, நீங்கள் கேட்ட லஞ்சப்பணத்தை குறைத்துக்கொள்ளுங்கள் என்று அவரிடம் கேட்டேன் அதற்கு அவர், சரி ஒரு ரூ.10,000/-த்தை மட்டும் குறைத்துக்கொண்டு மீதப் பணம் ரூ.16,400/-யை தனக்கு லஞ்சமாக கொடுக்கவேண்டும் என்று என்னிடம் கூறினார். நான் அவரிடம் சரியென்று கூறி, பணத்தை ரெடிபண்ணிக் கொண்டுவருவதாகச் சொன்னேன். பின் நான், மிகவும் மனவேதனையுடன் எனது வீட்டிற்கு சென்றேன். மேலும் எனக்கு லஞ்சம் கொடுத்து நெல் விற்பனை செய்ய விரும்பாததால், மேற்படி அரசு அலுவலர் திரு.மகேஸ்வரன் என்பவர் மீது தக்க நடவடிக்கை எடுக்கும்படி தங்களை கேட்டுக்கொள்கிறேன். இப்படிக்கு, ஒப்பம் திரு.ம.அருளாந்து 12.04.2021.

Sir, Received the complaint on 12.04.2021 at 08.30 hrs and conducted confidential enquiry. I registered a case in Sivagangai, Vigilance and Anti-Corruption Unit Crime No.04/2021, U/s 7(a) of Prevention of Corruption Act 1988 (as amended in) Act 16 of 2018 on 12.04.2021 at 09.00 hrs, sd.M.Kumaravel, Inspector of Police, Vigilance and Anti-Corruption, Sivagangai Detachment.

இந்த வழக்கின் அசல் FIR மற்றும் அசல் புகார் மனு ஆகியவற்றை கனம் சிறப்பு நீதிபதி, ஊழல் தடுப்பு வழக்குகளுக்கான சிறப்பு நீதிமன்றம், சிவகங்கை அவர்களுக்கும், நகலை உயரதிகாரிகளுக்கும் அனுப்பி வைக்கிறேன். ஒரு நகலை விசாரணைக்காக நான் எடுத்துக்கொண்டேன்.